உ



யாழ்ப்பாணம் - மூளாய்

## திரு. முத்துக்குமாரு - கணபதிப்பிள்ளை

அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்து வெளியிடப்பெற்ற

★

# நினைவு மலர்

விபவ ஆண்டு ஐப்பசி மாதம்

17-10-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



யாழ்ப்பாணம் - மூளாய்

# திரு. முத்துக்குமாரு - கணபதிப்பிள்ளை

அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்து வெளியிடப்பெற்ற

★

# நினைவு மலர்

விபவ ஆண்டு ஐப்பசி மாதம்

17-10-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு. மு. கணபதிப்பிள்ளை

தோற்றம்: 1906-06-06 மறைவு: 1988-09-17

### கட்டளைக் கலித்துறை

சென்றே மறைந்தனை என்றுரை தம்செவி யுற்றிடலும்
நின்றே திகைத்தனர் நேருமுன் சுற்றமிர் நீணிலத்தில்
நன்றே புரிந்திட நல்லுறவாகிய நண்பரெல்லாம்
என்றோ வுமையினிக் காண்பதென் றேங்கி யிரங்கினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருவருள் துணை

# ஆன்ம சாந்தியுரை

நிலவளம், நீர்வளம் இறைவிளக்கம் பெற்ற மூளாயம் பதியில் உதித்த கூட்டுறவுப் பரிசோதகர் அமரர் முத்துக் குமாரு கணபதிப்பிள்ளை அவர்களை அறியாதார் சிலரே. அன்னார், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறை யும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற திருக்குறளுக்கு இணங்க மனிதருள் தேவனாக வாழ்ந்தவர். சமயத் தொண் டும், குருபக்தியும் ஈகைச் சிறப்பும் பொருந்தியவராகத் திகழ்ந்தார். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்றவாறு இறைவனடி சேர்க் கும் பாலமாக குருவை போற்றி மதித்த பண்பாளர். யாக்கையின் நிலையாமையை உணர்ந்து. தாமரையிலைத் தண் ணீர் போன்று உலகாயதத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்தவர். அன்னர் எனது அன்பிற்கும் ஆசிக்கும் உரியவ ராக வாழ்ந்தவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி.

## உபதேச மொழி

இந்து மதம் - ஒருவன் தனது வருவாயில் முக்கால் பங்கை தானதருமம் செய்யும்படி உபதேசிக்கின்றது. அப்பொழுது தான் "என்னுடைய எல்லாம்" என்ற மமதையும் பற்றும் அறுவதற்கு வழி பிறக்கும். பெரும் சுமையை இறக்கிவைத் தவன் போன்ற நிம்மதியுணர்வு உண்டாகும், மனம் திருப்தி யடையும். நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம். இந்த மாபெரும் சோஷலிச கருத்தை நமது இந்து மதம் உபதேசிக்கின்றது.

சுபம்.

இ. குமாரசாமிக் குருக்கள்
சுழிபுரம்.
24-09-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை

பெரியார் முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை பேரானந்தப் பெரு வாழ்வை அனுபவிப்பதற்காக மண்ணுலகைவிட்டு விண்ணுலகை அடைந்துள்ளார். அவர் உள்ளத்தால் பொய்யா தொழுகினராதலின் உலகத்தால் எல்லாராலும் நினைக்கப்படும் பெருமதிப்பைப் பெற்றுள்ளார்.

பெரியார் கணபதிப்பிள்ளை எப்பொழுதும் "தனக்கெனவாழாப் பெருமகனாகவும்" "பிறற்கறம் முயலும் பெரியோனு"கவும் வாழ்ந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. தமர் பிறர் என்று பாராது எவர் இன்னல் பட்டிருந்தாலும் அதனைக் களைய தம்மால் ஆனதைச் செய்யத் தவறியதில்லை. மூளாயில் அவர் முன்னின்று நடத்தாத கலியாணமோ பொது நிகழ்ச்சியோ இல்லை எனலாம். வேண்டுவார் வேண்டுவன அறிந்து உடன் உதவும் பெரியாராக அவர் திகழ்ந்ததனாலோ என்னவோ அவருடைய இறுதி யாத்திரையில் பங்குபற்ற வெள்ளம் போல் மக்கள் கூட்டம் வந்திருந்தது.

கூட்டுறவுப் பரிசோதகராக இயங்கிய அவர் தமது சேவையில் நேர்மை, நிதானம், கடமை, கட்டுப்பாடு என்ற பண்புகளை கடைசி வரை கடைப்பிடித்தமையினால் கூட்டுறவாளர்களின் பெருமதிப்பினைப் பெற்றிருந்தார். கணக்காய்வுத் துறையில் அவருக்கிருந்த அபார திறமையைக் கண்டு அவரது மேலதிகாரிகளும் மற்றையோரும் பிரமித்தனர். குறைகளைக் கண்டிக்கவும் குணத்தினைப் போற்றவும் அவர் என்றும் தயங்கியதில்லை. அதனாலே அவர் குணத்தின் குன்றாகவே மதிக்கப்பட்டார்.

தனக்குச் சரி என்று கண்டதை எது வரினும் எதிர்த்து செய்து முடிக்கும் வைராக்கியமும் தீரமும் உள்ளவராக மிளிர்ந்துள்ளார். எடுத்த காரியத்தை தொடுத்து முடிக்கும் வைராக்கியம் அவரிடத்தில் நிறைய இருந்தது ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை அவருக்கு உரிய நேரத்தில் நினைத்ததைச் சாதிக்கும் சக்தியை கொடுத்தது. பிற்காலத்தில் அவருடைய கண்பார்வை குன்றிய போதும் எதோ ஒரு ஞான ஒளி உள்ளிருந்து இயங்குவது போன்று உற்றாருக்குத் தெரிந்தது.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்பதற்கிணங்க அவரது பிள்ளைகள் கல்வி கேள்விகளில் நிரம்பி ஒழுக்க சீலர்களாக இருப்பது பாராட்டத்தக்கது. அன்பு சால் இல்லத்தரசியோடு அவர் நடத்திய இல்வாழ்வு "வையத்தில் வாழ்வாங்கு" வாழவேண்டிய பெருவாழ்வாகவே அமைந்திருந்தது.

**அவருடைய ஆன்மா சாந்தி அடைவதாக!**

"நீ என்னுனை் என்பதல்லால்
ஏழையேன் என் சொல்லி ஏற்றுகேனே"

**அ. ஜெ. செந்தில்நாதன்**
ஓய்வு பெற்ற அரச அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதிப்பிள்ளை எனும் இனிய ஆசான்

எமது நீண்ட கால நண்பரும், பழம்பெரும் கூட்டுறவாளருமாகிய திரு. முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை அவர்கள் காலமான செய்தியை அறிந்ததும் கவலை நெஞ்சை நெருடியது.

அவருடன் பழகிய இனிய காலத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். அவர் மாகாணக் கணக்காய்வாளராக திணைக்களத்தில் சேர்ந்தார். பல இடங்களிலும் அவர் சேவை செய்தார். குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் அவருடன் சேவை செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அக்காலத்தில், நாமனைவரும் அவருடன் நெருங்கிப் பழகினோம். கடமையில் மிகக் கண்டிப்பானவர். அக்காலத்தில் அவர் சிறந்த கணக்காய்வாளராக நன்கு மதிக்கப்பெற்றவர் சீர்குலைந்த பல கூட்டுறவுச் சங்கங்களை மறு சீரமைத்து இயக்கியவர். கடமை செய்யும்போது எமக்கு அவர் ஓர் ஆசானாக இருந்து வழி நடத்தியதோடல்லாமல் கடமை தவிர்ந்த நேரங்களில் இனிய நண்பராய் நெருங்கிப் பழகி மகிழ்வித்தவர். எவருக்கும் தானே முன் வந்து உதவுவார். அவருடன் பழகிய இனிய காலம் இன்னும் என துள்ளத்தில் பசுமையாக உள்ளது. அவருக்குச் சமகாலத்திலிருந்தவர் களில் குணநலனில் முதன்மையாகத் திகழ்ந்தவர் என்றால் ! அது மிகை யாகாது.

கஷ்டப்பட்டவர்களெல்லோரும் கடைத்தேறவேண்டும் என்ற பெருமனங் கொண்டவர். அவரது உயர்ந்த உள்ளத்திற்கேற்ப நிறைந்த வாழ்வு வாழ்ந்து அமரரானார். அவரது பிரிவால் துயரு றும் அவரது குடும்பத்தினருக்கு எனது தேற்றத்தைக் கூறி அவரது ஆன்மா இறைவனடியில் இணைய வேண்டுமாய்ப் பிரார்த்திக் கின்றேன்.

சாந்தி!

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
(கணக்காய்வுப் பகுதி)
யாழ்ப்பாணம்.

1988-09-27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கண்ட கூட்டுறவின் தந்தை அமரர்
# திரு. மு. கணபதிப்பிள்ளை
## அவர்கள்

இவ்வையத்தில் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்காக வகுக்கப்பட்ட நெறிகளுள் தோன்றிற் புகளோடு தோன்றுக என்பது வள்ளுவன் வகுத்த நெறியாகும் அந்த வள்ளுவன் வகுத்த நெறியினிற்கு வடிவம் கொடுத்து வாழ்ந்தவர்களுள் முதன்மையும் முழுமையும் பெற்று வாழ்ந்தவர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களாவார்!

இளமைப் பருவத்திலே அறிவும் ஆற்றலும் அழகும் நிரம்பியவராக விளங்கிய திரு. மு. கணப்பிள்ளை அவர்கள் எமது கிராமத்திற்கும் மக்களுக்கும் ஆற்றிய தன்நல மற்றபணிகள் அளப்பரியன, எமது கிராமமாகிய மூளாயின் நாமம் உலகெல்லாம் பரவுவதற்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை காரணமாய் இருந்த தென்றால் அந்த வைத்தியசாலையை மூளாயில் அமைப்பதற்கு அரும் பாடுபட்டு அயராது உழைத்தவர்களில் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் முதன்மையானவர் என்பதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்!

மூளாய் கிராமத்தவர்களுக்கு மட்டுமன்றிஅயற்கிராமத்து மக்களுக்கும் கூட முதுமைக்காலத்தில் ஊன்று கோலாக உதவுகின்ற மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய நிதிச் சங்கத்தினை இக்கிராமத்திலே முழுமை பெற்று வளரச் செய்த பெருமை திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களையும் சாரும் இச்சங்கத்தை மூளாயில் அமைப்பதற்கு முன்நின்று முயன்றவர்களுக்கு துணைநின்று பின்னர் தன் அயராத முயற்சியினால் சங்கத்தை வளர்த்து வளம்படுத்த தன்னை அற்பணித்தார் என்று சொன்னால் மிகையாகாது!

தமிழின் மீதும் தமிழ்மக்கள் மீதும் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் காட்டிய ஆர்வத்தினையும் அக்கறையினையும் நான் நன்கு அறிவேன். அரசியல், கலை கலாச்சார, இலக்கிய மேடைகளில் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் தோன்றுகின்ற காட்சியும், குரலும், ஆழமான கருத்துக்களும் இன்றும் என்நெஞ்சில் பசுமையாகவே இருக்கின்றன. சிம்மக் குரலிலே ஆழமாகவும் ஆணித்தரமாகவும் பேசுவார். பேசியதைச் செயல் வடிவிலேயும் காட்டுவார். அறிவும் ஆற்றலும் பல துறைகளில் பாண்டித்தியமும் பெற்ற அவர் தன் உள்ளத்திலே நியாயம், நீதி, நேர்மை என்று தீர்மானித்த எதையும் எவருக்கும் பயமின்றி எடுத்துரைத்து செயல் வடிவம் கொடுக்கின்ற வல்லமை படைத்த பண்பாளன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் என ஔவை சொன்ன தை இவ்வமரர் தன் காலத்தில் பல சங்கங்களின் பல வருடக் கணக்கை எண்ணின் திறமையால் பரிசோதித்து முடிவு காண்பதும் அதனை எழுத்தின் திறமையால் விமர்சிப்பதும் பல உயர் அதிகாரிகள் அதிசயிக்கும் வகையில் கடமையும் புரிந்துள்ளார். சில வருடங்களுக்கு முன் அவரும் நானும் கதைத்த போது அவர் கூறிய சில வசனங்கள் எனது மனதில் அழியாமல் பதிந்து இருந்தமையை இப்பொழுது குறிப்பிடக் கூடியதாக இருக்கின்றது.

“யாழ் கச்சேரியில் உள்ள சங்கம் ஒன்றின் கணக்கின் உண்மை விளக்கத்தை எடுப்பதற்காக தன்னை உயரதிகாரிகள் விஷேசமாக அனுப்பியதாகவும் அச்சந்தர்ப்பத்தில் மூளாய் தோம்பு பிரிவை தான் பார்த்ததாகவும் தற்செயலாக தனது முன்னோர்களின் பெயரில் எமது கோயில்கள் அமைந்திருக்கும் காணியாகிய வரதன் புலோ பதிவில் இருப்பதைக் கண்டு தான் எடுத்த பிரதியை எனக்கு காண்பித்தார்.”

சரி பிழை தெய்வங்களுக்குத் தான் தெரியும் என்றேன். அவர் புன்முறுவல் செய்து விட்டு தனது கருத்தும் அதுதான் என்று கூறினர்.

மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்பதையும் மகேஸ்வரனே மக்களின் சொத்து என்பதையும் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் அன்றே பல வழிகளாலும் நிரூபித்திருந்தார். மூளாய்க் கிராமத்தை முன்நின்று ஆழுகின்ற ஆலயத்தையும் ஆண்டவனையும் தனிப்பட்ட எவரும் உயில் முடித்து உரிமை கொண்டாட முடியாது. கிராமத்து ஆலயம் கிராம மக்கள் அனைவரதும் பொது உடமை என்பதை அன்றே அவர் பலவழிகளாலும் ஆதார பூர்வமாக நிரூபித்திருந்ததால் தான் அவர் நடமாடித்திரிந்த காலத்தில் இல்லாமல் மக்களின் போதாத காலமோ என்னவோ அவர் நடமாட முடியாமல் படுக்கையில் இருக்கும் இறுதிக்காலத்தைப் பயன்படுத்தி ஆலயத்திற்கும் ஆண்டவனுக்கும் உரிமை கோரும் அவா உதயமாயிற்று. “அவர் ஆலயத்திற்கு செல்வது ஆண்டவனைத் தேடியல்ல மக்களைத் தேடியே ஏனென்றால் ஆண்டவனும் ஆலயமும் மக்கள் அனைவரதும் சொத்து அதனால் ஆண்டவனைத்தேடி மக்கள் அங்கு வருவார்கள் என்று”!

மொத்தத்தில் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களின் குடும்பம் சுருக்கமாகச் சொன்னல் அது ஓர் பல்கலைக்கழகம். பண்பாட்டின் களஞ்சியம்! பொது உடமைத்தத்துவத்தை பறைசாற்றி நிற்கும் பூரண குடும்பம். வைத்தியசாலையானாலும் சரி, சகாயநிதிச் சங்கமானாலும் சரி, அரசியலானாலும் சரி, ஆலயமானாலும் சரி இவை அனைத்தும் மக்களின் சொத்துக்கள் மக்களின்றி இவையில்லை இவையின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களில்லை. என்பதை நிரூபித்து வாழ்ந்து காட்டியதால்தான் இவரை கூட்டுறவின்றி மக்களில்லை மக்களின்றி கூட்டுறவில்லை என்பதை நிரூபிக்க ஆண்டவன் இவரை ஒரு சிறந்த கூட்டுறவுப் பரி சோதகராக்கி பொதுவுடமைப் பொக்கிசமாக எம்மிடம் தந்தான். அன்னாரின் இழப்பு பொதுவுடமை விரும்பிகள் அனைவருக்கும் பேரிழப்பு ஆகும்.

**அன்னாரின் நாமம் வளர்க அவர்தம் தன்னலமற்றசேவை வெல்க! திரு. மு. க. வின் பொது உடமை வாழ்க!**

**அன்னாரின் ஆன்மா சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

இங்ஙனம்

**சி. மயில்வாகனம் J. P.**
(இளைப்பாறிய அதிபர்)
30-9-88. **மூளாய் கிராம அபிவிருத்தி சங்க தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவாளன், அமரர்

# மு. கணபதிப்பிள்ளை

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை வடபகுதி கூட்டுறவு இயக்க வளர்ச்சிப் பாதையின் உன்னத ஜோதியாகத் திகழ்ந்தது என்பதை கூட்டுறவாளர்கள் அறிவர். 1956ஆம் ஆண்டு வரை கிழக்கு மாகாணமும் இச்சபையுடன் இணைக்கப்பட்டிருந்தது. எனவே கிழக்கின் கூட்டுறவு வளர்ச்சியின் செழுமைக்கும் இச்சபை பெரிதும் உதவியது. இச்சபையின் வருடாந்த மகாநாடு தமிழ்ப் பகுதிகளிலுள்ள கூட்டுறவாளர்கள், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளும் பிரமாண்டமான மகாநாடாக மூன்று நாட்கள் நடைபெற்று வந்தன. இம் மகாநாடு கூட்டுறவு வளர்ச்சிக்கு உரமூட்டும் பயனுள்ள மகாநாடாக திகழ்ந்தது.

கிழக்கு மாகாணம், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையிலிருந்து பிரிந்து இயங்கத் தொடங்கியபின் வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சேர்ந்த அமைப்பாக வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை இயங்கத் தொடங்கியது. இச்சபை புதிய திட்டங்களை வகுத்து கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றமான வளர்ச்சிக்கும் பரந்தளவிலான சேவையை ஆற்றிவந்தது. அவற்றினை மேற்பார்வை செய்வதற்கு கூட்டுறவு உப பரிசோதகர்களை நியமித்தது. அச்சந்தர்ப்பத்திலே திரு. மு. கணபதிப்பிள்ளையும் உப பரிசோதகராக வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையில் 1938இல் கடமை புரிய நியமிக்கப்பட்டார். திரு. கணபதிப்பிள்ளையின் சேவைக்கும் வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைக்கும் நெருங்கிய தொடர்பு இதிலிருந்து ஆரம்பித்தது.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை அக்காலத்தில் கூட்டுறவுப் பரிசோதகர்களை நியமித்தும். மேற்பார்வை செய்தும் வந்தது. அத்தோடு 'ஐக்கிய தீபம்' என்னும் திங்கள் இதழையும் வெளியிட்டு வந்தது( 1955ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கலாசாலையை நிறுவி கூட்டுறவுப் பயிற்சியை சிறப்புற அளித்து வந்தது.

திரு. கணபதிப்பிள்ளை தனது சேவையின் தலைமைக் காரியாலயப் பரிசோதகராகப் பதவியுயர்வு பெற்று பணியாற்றி 1963 இல் இளைப்பாறினார். அதன்பின்பு, அன்னார் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் பொருளாளராகச் சேவை செய்யத் தொடங்கினார்.

மேற்படி சபை சங்கங்களின் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் விரிவான முறையில் திட்டமிட்டு கருத்தரங்குகள், போதனை வகுப்புகள் முதலியவற்றை நடாத்தி வந்தது. இவற்றில் திரு. கணபதிப்பிள்ளை பங்கெடுத்து அவைகளை நிறைவு பெறச் செய்தார். வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை சங்கங்களில் கணக்கு வைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை சிறப்பாக அளிக்க வேண்டுமென்று சேகரகணக்குப் பதிவாளர் பகுதியை ஆரம்பித்தபோது திரு. கணபதிப்பிள்ளை அவர்களையே அதற்குப் பொறுப்பாளராக நியமித்தது. அவரது திறமையாலும், சிறந்த கட்டுப்பாட்டினாலும் அப்பகுதி திறம்பட இயங்கி சங்கங்கள் நல்ல பயன்பெற உதவியது.

திரு. கணபதிப்பிள்ளை, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் பொருளாளராக திறம்பட சேவை செய்தமையை எளிதில் நாம் மறக்க முடியாது. அவர் ஓர் சிறந்த கணக்காளர், அலுவலகத்தில் கணக்கு சம்பந்தமாகத் தொடங்கிய பணியில் தெளிவு ஏற்படும் வரையில் சாப்பிடாமலே இருந்து பணியாற்றுவார்.

திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் மகாநாடுகள், கருத்தரங்குகள் முதலியவற்றில் கூட்டுறவின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறான கருத்துக் கிளம்பினல் அதைச் சுட்டிக்காட்டி சரியான கொள்கையை அஞ்சாது எடுத்து முழங்குவார்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் மகத்தான சேவைக்கு தமது வாழ்வை பல கூட்டுறவுப் பெரியார்கள் அர்ப்பணித்துள்ளார்கள், மேற்படி சபையின் வளர்ச்சிக்கு திரு. கணபதிப்பிள்ளையின் பங்களிப்பும் மகத்தானதாகும்.

மூளாய் கிழக்கு ஐ. நா. சங்கத்தின் தலைவராகவும், தொல்புரம் மூளாய் ஐக்கிய நாணய சங்க சமாஜத்தின் தலைவராகவும் அவர் சேவையாற்றியுள்ளார்.

இத்தகைய கூட்டுறவுப் பெரியாரின் மறைவு கூட்டுறவுத் துறைக்கு பேரிழப்பாகும். நேற்று இருந்தவர் இன்று இல்லை என்பதே இந்த உலகத்திற்குப் பெருமை என்கிறார் வள்ளுவர். அதன் அடிப்படை அர்த்தம் இந்த உலகம் மாறும் தன்மை உடையது. இறப்பே உண்மையானது என்பதுதான். எனவே நாம் இந்த உண்மையை உணர்ந்து, உண்மைப் பொருளாகிய இறைவனை திரு. கணபதிப்பிள்ளையின் ஆத்ம சாந்திக்காக இறைஞ்சுவோமாக.

**பொ. செல்வரத்தினம்**
இளைப்பாறிய கூட்டுறவுத் தலைமைக் காரியாலயப் பரிசோதகரும்,
வ. ஐ. மே. சபை முன்னாள் நிர்வாகச் செயலாளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுப் பெரியார் அமரர்

# திரு. மு. கணபதிப்பிள்ளை

வட இலங்கையில் கூட்டுறவாளர்களை உருவாக்கிய வலிகாமம் மேற்குப் பகுதியில், மூளாய் கிராமத்திலே முத்துக்குமாரு கணபதிப் அவர்கள் 1906-ம் ஆண்டு பிறந்தார். அன்னார் தமது ஆரம்ப கல்வியினை நிறைவு செய்தபின், 1938-ம் ஆண்டு வட பகுதி ஐக்கிய மேற்பார் வைச்சபையில் கூட்டுறவுச் சங்க உபபரிசோதகராகக் கடமையில் சேர்ந்தார். அயராத விடா முயற்சியின் காரணமாக அவர் எண் பார்வை உதவியாளராக 1946 ல் பதவி உயர்வு பெற்றார். அதே ஆண்டில் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தராக அவர் நியமிக் கப்பட்டு, உன்னத சேவை ஆற்றியதன் பயனாக 1958 ல் தலைமைக் காரியாலயப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றார். 1963 ல் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர் பதவியிலிருந்து இளைப்பாறி னார்.

இளைப்பாறிய காலந் தொடக்கம் 1971 ம் ஆண்டு வரை வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபையின் நிருவாகக் குழுவில் உறுப் பினராக இருந்து அவர் அரும் பெரும் சேவை ஆற்றினார். வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபையின் பொருளாளராக திரு. கணப திப்பிள்ளை அவர்கள் செய்த திறமைமிகு சேவை மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

வட மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே சிறந்த முறையில் கணக்கு வைக்கும் முறைகளை நடை முறைப்படுத்த வேண் டும் என்று வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை சேகர கணக்குப் பதிவாளர் பகுதியை அன்று ஆரம்பித்தது. அப்பகுதிக்கு திரு. கண பதிப்பிள்ளை அவர்களே தலைமை தாங்கினார். சேகர கணக்குப் பதி வாளர் பகுதியை சங்கங்களுக்குச் சிறந்த பயனளிக்கும் வகையில் திறம்படச் செயற்படும்படி செய்த பெருமை அவரையே சாரும்.

கூட்டுறவையே தனது உயிர் மூச்சாகக் கொண்ட திரு. கண பதிப்பிள்ளை அவர்கள், தொல்புரம் மூளாய் ஐக்கிய நாணய சங்க மேற்பார்வைச் சமாசம், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கம், வட மாகாண கூட்டுறவு வங்கி, மலையாளம் புகையிலைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நிருவாக உறுப்பினராக இருந்து கூட்டுறவு மூலம் நாட்டிற்கு நலம் மிக்க சேவை புரிந்துள்ளார்.

வட பகுதியிலே எங்கெங்கு கூட்டுறவாளரின் குரல் ஒலிக்குமோ அங்கெல்லாம் திரு. கணபதிப்பிள்ளை அவர்களது கம்பீரமான குரல் ஒலித்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 ல் ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம் ஆரம்பிக்கப் பட்ட பொழுது அதன் அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து அவர் ஆர்வத்துடன் செயற்பட்டார்.

இத்தகைய சிறப்பு நலன்களும், செயற் திறன்களும் மிளிர்ந்த பெரியார் திரு. கணபதிப்பிள்ளையின் இழப்பு கூட்டுறவுத்துறைக்கும், சமுதாயத்திற்கும் ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போமாக!

**க. கணேசலிங்கம், பி. எஸ். சி. (இலங்கை)**
செயலாளர்
**தேசிய கூட்டுறவுச் சபை**
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

யாழ்ப்பாணத்து, மூளாயம்பதியில் வரதன்புலோ சித்திவிநாயகரும் அவர் தம்பி முத்துக்குமாரசுவாமியும் பக்கத்தே வீற்றிருக்கின்ற கிராமத்தில் பிரபல்யமான சைவ வேளாள மரபில் உதித்த திரு. கணபதிப்பிள்ளை முத்துக்குமாருக்கும், திருமதி வள்ளியம்மைக்கும் பிள்ளையாக அவதரித்தார்.

இவர் ஆரம்ப கல்வியை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், பின்பு சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், அத்தோடு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி கற்றார். இளமையிலேயே பொதுப் பணிகளில் பங்குபற்றி பெரியோரின் நன்மதிப்பைப் பெற்றார்.

அமரர் திரு. கணபதிப்பிள்ளை சிறு வயதிலிருந்தே மூளாய், வரதன்புலோ சித்திவிநாயகரில் ஆழ்ந்த பக்தியுடையவர். இதோடு மூளாய் கிழக்கில் இருக்கும் பெரியநாயகி அம்மனிலும் விசுவாசமுள்ளவர். இவர் சொற்பகாலம் மலேசியாவில் மாமனுரோடு இருந்து உத்தியோகம் பார்த்தார். ஆனல் அவ்விடத்தில் அதிககாலம் இருக்க முடியவில்லை. நாடு திரும்பியபின் தொல்புரம், மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தில் பணிபுரிந்து வீடுவீடாகச் சென்று அச்சங்கத்தை வளர்த்தார். மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்திலும் அங்கத்தவராக இருந்தார்.

இவ்வேளையில், தெய்வ அருளால் கூட்டுறவு இலாகாவில் எண் பரிசோதகராக சேவையில் அமர்த்தப்பட்டு பணி புரிந்தார். அங்கு பணிபுரியும்பொழுது சக உத்தியோகத்தரினதும், உயர் அதிகாரிகளினதும் பாராட்டைப் பெற்றார். அவரில் மூன்று குணதிசயங்கள் மேலோங்கி விளங்கியது. அதாவது ஓர்மம், துணிச்சல், நேர்மை யாவன. இவைகள் உயர் அதிகாரி பெரியோர்களினதும், கவனத்தை ஈர்த்தன.

அரச சேவையில் இருந்தபொழுதும், இளைப்பாறிய பின் முழு நேரத்தையும் பொதுப் பணிகளில், குறிப்பாக கிராம அபிவிருத்தியுடைய சேவைகளில் ஈடுபட்டிருந்தார். எந்த இடத்திலும் அவரின் துணிச்சலும், நேர்மையும், ஞாபக சக்தியும் அவர் சிறந்து விளங்குவதற்கு உறுதுணையாய் இருந்தன. குறிப்பாக, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, கிராம முன்னேற்றச் சங்கம், விவசாய அபிவிருத்திச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம், வரதன்புலோ சித்திவிநாயகர் பரிபாலன சபை ஆகியவைக ளைக் கூறலாம். எந்த ஒரு கருமத்தில் ஈடுபட்டாலும் அது சீராக நிறைவேறும் வரைக்கும் ஓயமாட்டார், கண்ணும் கருத்துமாகப் பணிபுரிவார்.

அமரர் திரு. கணபதிப்பிள்ளை, கடைசிக் காலங்களில் மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் வளர்ச்சியிலேயே கூடிய கவனம் செலுத்தினர். இச்சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு பயனளிக்கக் கூடிய சேமிப்பு, அந்தியகாலச் சேமிப்பு ஆகிய திட்டங்களை நடைமுறைப் படுத்துவித்தார். இச்சங்கத்தில் கௌரவ செயலாளர், தனாதிகாரி, உபதலைவர், தலைவர் ஆகிய பதவிகளை ஏற்றுச் சிறப்பாக நடத்தினர்.

அவர் குடும்பத்திற்கேற்ற தகுதிவாய்ந்த பத்தாவிற்கேற்ற பதி விரதையாகிய ஆச்சிமுத்து என்ற பெண்மணியை மணஞ் செய்தார். இவர்களுக்கு நான்கு ஆண்களும், மூன்று பெண்களும் உள்ளார்கள். இவர்கள் எல்லோரும், கடைசி ஆண்பிள்ளையைவிட விவாகஞ்செய்து சீரும் சிறப்போடும் விளங்குகிறார்கள். கடைசிமகன் லண்டனில் கணக் காளராக பணிபுரிகிறார்.

அமரர் திரு. கணபதிப்பிள்ளையின் வாழ்வு சிறப்பாக நிறைவேற காரணகர்த்தா அவரின் குலதெய்வங்களான மூளாய் வரதன்புலோ சித்திவிநாயகரும், மூளாய் கிழக்கில் எழுந்தருளியிருக்கும் பெரிய நாயகி அம்மனுமே.

**இவரின் ஆன்மா சாந்தியடைய எல்லோரும்**
**பிரார்த்தனை செய்வோமாக.**

**''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.''**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**வ. அம்பலவாணர்**
**O. A.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## மூளாய் கிழக்கு ஐக்கியநாணய சங்கத்தின்

# அனுதாபச் செய்தி

அமரரான திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்தில் 1963 ம் ஆண்டு 12-ம் மாதம் 10 ந் திகதி யிலிருந்து அமரராகும் வரைக்கும் அங்கத்தவராக இருந்தார். இக் காலத்தில் அவர் சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகவும், தனாதி காரியாகவும், துணைத்தலைவராகவும், தலைவராகவும் சிறப்பாகப் பணி யாற்றினார்.

அவர் சங்கத்தின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் மிக அக்கறை எடுத்து வந்தார். ஒரளவிற்கு அவர் கூட்டுறவு இலாகாவில் கூட்டுறவு எண்பரிசோதகராக கடமையாற்றி அதன் மூலம் பெற்ற அனுபவங்களை இச்சங்கத்தின் கணக்குகளையும் மற்ற அலுவல்களையும் சீராக நடத்தவும், மற்றவர்களுக்கு வழிகாட்டவும் உறுதுணையாய் இருந்தது. கூட்டுறவு பரிசோதகராக பணிபுரியும் முன்பும் அவர் இச் சங்கத்தில் 13 வருடம் அங்கத்தவராக இருந்தார்.

அவரின் மறைவு இச்சங்கத்திற்கு ஓர் பேரிழப்பென்றே கருத வேண்டும். இச்சங்கம் தங்களின் ஆழ்ந்த அனுதாபச் செய்தியை தெரிவிக்கின்றது.

**"இவரின் ஆன்மா சாந்தியடைய சங்கம் பிரார்த்திக்கின்றது."**

மூளாய் கிழக்கு ஐக்கிய
நாணய சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONDOLENCE MESSAGE

It falls to me as Senior Officer in the Department of Co-op. Development and one belonging to the neighbouring village who had close association with Mr. Muthukumaru Kanapathipillai for over three and thirty years to record my deep feeling of regret at the death of Mr. Kanapathipillai.

Mr. Muthukumaru Kanapathipillai was born on 6-6-1906 and at the early age of twenty he migrated to Malaysia where he served for a period of five years in the Malayan Railways. His Love for his homeland and desire to serve his country stood supreme in his mind and he therefore decided to return to Sri Lanka.

He was interested in socio ecomic development and hence embraced the Co-operative movement to acheive his goal. From 1932 — 1942. He performed various functions in the Co-operative movement in an unofficial capacity as a devoted missonary. The Death Benevolent Co-op. society, Moolai and several credit societys in the Vali West area owe their existence largely due to the pioneering efforts of Mr. Kanapathipillai. He was also one of the pioneers of the Nothern Division Co-operative Federation which was instrumental to put up that Magnificient Veerasingam Building in Jaffna.

In recognition of his Co-operative service he was recruited as Sub. Inspector in the Dept of Co-op. Development in 1942 and after having served in the Dept for two and twenty years, he retired from Govt. Serviee.

Mr. Kanapathipillai who had a thorough basic training and practical experienee while being an unofficial Co-operator though not having acadamic accomplishment was therefore able, in a degree not to be excelled by others.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In addition to his wide experience and invaluable knowledge, he possessed in abundance, that cool judgement, that elastic temper, that far seeing intelligence. that capacity for work and attention to details and that undomitable energy, which are absolutely necessary for effective leadership in any walk of life. His talents were not these only.

His knowlede of accounts & his affinity for figures made him a capable and efficient auditor. He was appointed provincial auditor for the Eastern province while in the Co-operative Dept.

I am confident that his good deeds will always remain with us. May his soul rest in peace.

**M. Kandiah**

Retired Assistant - Commissioner,
of Co - Operative Development

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONDOLENCE MESSAGE

Guru Ganapathi as I had affectionately nicknamed him was a fierceless, aggiessive, dynamic personality with all the old world mannerisms.

He had an opinion on any subject - right or wrony - and would defence it to the last till proved otherwise. However his opinion on the mundane worldly things were accurate and were sought after very much by all around. He would not brook any injustice to anyone and would seek to rectify it, even if it meant physical force with which God endowed him abundantly.

His honesty of purpose and intergrity was beyond guestion and it is for this more than anything else that he was admired and respected. He was a tower of stength to his wife, sister, their children and all around him.

With his passing away we lose a very helpful personality.

May his dreams of Eternity be fulfilled.

*Dr. P. Ratnasabapathy*
**M. B. B. S. (Cey), D. T. M. & H. (Cey), D. P. H. (TORONTO)**
**Kaithady.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

## 21 நாமங்கள்

ஓம் கணபதி
ஏரம்பன்
மோகன்
தரணிதரன்
கலாதரன்
கசியபந்தன்
மகாகணபதி
இப்பிரபிரசாதனன்
ஆசாரபூரகன்
வரதன்
ஜெயன்
அமுதமந்திரன்
இலக்ககணபதி
வரச்சிகதன்
பீசவிஞயகன்
மங்கள விஞயகன்
உருண்டி விஞயகன்
பிரிய கணபதி
சித்திவிஞயகன்
சிந்தாமணி விஞயகன்
ஓம் மகோற்கடக மூர்த்தியே நம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## விநாயகர் வணக்கம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

## தேவாரம்

பிடியதன் னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தன தடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே.

பித்தாப்பிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை — நல்லூரருட்டு றையுள்
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

## திருத்தாண்டகம்

நிலைபெறுமா றெண்ணுதியேன் நெஞ்சே !நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல் சேர்செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரன்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுலக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடைமட வான்உமை கோன்அடி
யோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவிஅறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ
ழிருக்க வென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

## கந்தரலங்காரம்

நாளென் செய்யும்வினை தான்என்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங் கூற்றென்
செய்யும் குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

மாமறைத் தலைவா போற்றி
மதிகுல விளக்கே போற்றி
காமரித் திரண் முன்னோேனோர்
காண்பதற் கரியாய் போற்றி
தாமரைக் கண்ணாய் போற்றி
கரியல ரேறே போற்றி
தோமறு செல்வம் வாய்ந்த
துவாரகைக் கிறைவா போற்றி.

## கந்தகோட்டம்

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறும் நினதுபுகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டுமதமான பேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான்வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

— இராமலிங்க சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழிபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலைஆழி அறிதுயில்கொள் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

— அபிராமி பட்டர்

## பட்டினத்தார் பாடல்

மனையாளும் மக்களும் வாழ்வுந்தனமும் தன்வாயிமட்டே
இனமான சுற்றம் மயான்மட்டே வழிக்கேதுணை
தினையாமள வெள்ளள வாகினுமுன்பு செய்தவம்
தனையாள வென்றும் பரலோகம் சித்திக்கும் சத்தியமே.

## புராணம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம்வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## சரஸ்வதி வணக்கம்

ஆயகலைக ளறுபத்து நான்கினையும்
மேய வுணர்விக்கு மென்னம்மை — தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தினுள்ளே
யிருப்பளிங்கு வாராதிடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கலாவல்லிமாலை

வெண்டா மரைக்கன்னி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய் தரநாற் கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கோ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே.

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற் கடலுந்
தேக்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலா வல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுர தாட்கமலத்(து)
அஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொக் திருந்தாய்
சகல கலா வல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி செய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமைகொள்
வாய்நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை செல்வப் பேறே
சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்டு முயிரா மேய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய் மைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுண் போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலா வல்லியே.

குமரகுருபர சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

சிவமயம்

# யாழ்ப்பாணம் — மூளாய்

## இலங்கைநாயக முதலியார் வழித்தோன்றலும்
## பிரபல சைவவேளாண் மரபினருமாகிய
## திரு. முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை அவர்கள்
## சிவபதமெய்தியமை குறித்த

# நினைவுப் பாக்கள்

இயற்றியவர்: **பிரம்மஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள் அவர்கள்**
*(உப அதிபர், நகுலேஸ்வர மகாவித்தியாலயம், கீரிமலை)*

## வெண்பா

**செப்பு விபவதனிற் சேர்புரட் டாதிபூர்வம்
ஒப்பிலாச் சப்தமியோ டுற்றசனி — இப்புவியில்
சேர்கணபதிப் பிள்ளையெனும் செம்மல் தான்மறைந்து
சார்கயிலை சென்றடைந்த நாள்.**

## ஆசிரியப்பா

திருக்கேதீச்சரம் திருக்கோ ணசலம்
எனுமிரு தலங்கள் எய்திரு நயனமாய்த்
திகழ்ந்திடு மிலங்கா தீவின் வடபால்
மருவுயாழ்ப் பாண மாநக ரதன்கண்
தென்னைமா கதலி திகழுநற் பூகம்
ஆகிய நிறைந்தே அமையு மாணபதும்
வித்தியா லயத்தொடும் விளங்கு மைம்முகன்
அமர்ந்தருள் செய்யு மாலயந் தாமும்
தன்னகத் துற்ற தகைமை சான்றதும்
இந்திர னென்ன இயைந்திடு செல்வர்
மன்னி விளங்கும் மகிமை மிக்கதும்
ஆகுநற் பண்புகள் அமைந்தே திகழும்
மூளாய் என்னும் தொல்பதி யதன்கண்
எழில்பெறு மிலங்கை நாயக முதலியார்
தன்வழித் தோன்றிய தகைசால் பிரபு
இராம நாத ரென்னும் பெயரோன்
இராச ரத்தினம் முதலியார் வழிவரு
முத்துக் குமாரு தன்மக னாகிய
[illegible] பிள்ளையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மண மியற்றி நயப்பொடு மேவியே
புவியினிற் பெற்ற கணபதிப் பிள்ளை
தான்பெற் றுவந்த முத்துக் குமாரு
வனிதையர் திலகம் வள்ளி யம்மை
தன்னை மணந்தே மலாய நாடு
சென்று உத்தியோக மியற்றி வாழ்வு
நடாத்தி வையக மீதில் பெற்ற
மாசிலா மைந்தன் கணபதிப் பிள்ளை
மூன்றும் வயதினில் தந்தை இறந்திட
பேரனின் அரவணைப்புத் தன்னில் வளர்ந்து
மூளாய் சைவப் பிரகாச வித்தியா
சாலை யதனில் ஆரம்பக் கல்வி
பயின்றே அமைபின் நாளில் வட்டு
யாழ்ப்பாணக் கல்லூரி தன்னில் உயர்கலை
கற்றுத் தேறிய பின்னர் மலாய்
நாடு சென்றே புகையிரத இலாக்கா
தன்னில் அரும்பணி யாற்றி மீண்டும்
தாய்நாடு திரும்பியே நல்வாழ்வு கொண்டு
ஒன்று ஒன்பது மூன்று எட்டில் (1938)
கூட்டுறவுத் திணைக் களத்தில் சென்று
சேவை யாற்றியே செகதல மீதிற்
பெரிதிளைப் பாறிய புவிபுகழ் மகிபன்
சிறுபராயந் தன்னில் தனது தந்தையின்
தாயார் வயோதிப முற்றிருந்த வேளையில்
ஆக வேண்டிய கடமைகள் அனைத்தும்
புரிந்தே அகமகிழ் வுற்ற மேலோன்
மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை
தன்னொடு மூளாய் ஐக்கிய பரஸ்பர
சகாய நிதிச் சங்கம் ஆகிய
ஸ்தாபன ஆரம்ப கால வளர்ச்சிகள்
அனைத்திற்கும் ஊன்று கோலாக நிலவியே
பெரும்பணி புரிந்த புண்ணிய சீலன்
செல்விருந் தோம்பி வருவிருந் தினரை
நாடி மகிழ்வுறும் நன்மனம் படைத்தோன்
ஊருணிநீர் நிறைந் துற்ற லெனவும்
பயன்மர முள்ளூர்ப் பழுத்தா லெனவும்
பலர்க்கும் பயன்படும் பண்புமிக் குடையோன்
சமயா சாரம் தான்மிக வுடையான்
அன்னவன்
இல்லற மல்லது நல்லற மன்றெனும்
எழில்மூ தாட்டி உய்துரைக் கேற்ப
இராச நாயக முதலியார் வழிவரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதிப் பிள்ளையும் வள்ளி யம்மையும்
தந்த வனப்பிய வடமீன நங்கை
மாசிலா மனத்தாள் ஆச்சி முத்துவை
வேத மரபினில் வேதியர் வாழ்த்த
வரித்தனன் வாழ்க்கையை மேலும் உயர்த்த
ஒன்றிய உள்ளம் ஒருவிய பகைமை
மருவிய உறவு மறுவில் புகழுடன்
இயல்புடை மூவர் துறந்தார் துவ்வார்
இறந்தார் தென்புலம் விருந்து தெய்வம்
ஒக்கல் எல்லாம் ஒன்றி இல்லறம்
இனிதுற அமைந்த காலைத் தண்மதி
வளரும் வானம் வள்ளிய தாமரை
என்னப் மிளிரல் தம்பொரு ளாகப்
பாரினிற் பெற்ற செல்வத் தனையர்
நடராஜா தன்மக ளுகும் முன்னுற்
சி.பி.வி முகானம் யாளர் தாரணி
புகழ்சிவா னந்தனை மணந்தே கர்ணன்
சுபதாயினி மக்களைப் பெற்ற பேறுடை
மாது நல்லாள் கமலாம் பிகை
சிவ கதி யெய்திய கிருபா நந்தன்
அருணு சலம் பாரினல் பெற்ற
லிங்கன் என்ற பிறைசேர்ஸ் உரிமை
யாளர் நாக லிங்கம் பிள்ளையை
மணவினை பூண்ட ஞானம் பிகை
குமாரவேற் பிள்ளையின் புத்திரி யாகும்
நெடுங் கேணி மகாவித்தி யாலய
ஆசிரியையும் விஞ்ஞான ஆலோசகரு மாகிய
தெய்வச் சிலையை நன்மண மியற்றியே
விதுரன் ஹரப் பிரியா வுடனே
வாகிசன் வியாசன் ஆகிய சேய்களை
அவனிய லெய்திய நெடுங் கேணி
பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் காசாளர்
முத்துக் குமார சாமி தானும்
செல்லத் துரை தன்மக ளாகும்
செல்வக் குணேஸ் வரியை நன்மண
மியற்றிய செல்வச் சண்முகா ஸ்ரோர்ஸ்
உரிமை யாளர் சண்முக ராசா
இராச ரத்தினம் தான்பெற் றுவந்த
தையலர் திலகம் அளவை பலநோக்குக்
கூட்டுறவுச் சங்க லிகிதர் தாரணி
மகிழ்ஜெய பவானியை மணந்தே துவாரகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகவை எய்திய அளவை மல்லாகம்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது
முகாமை யாளர் தாமோதரம் பிள்ளை
ஜெய ரத்தினம் தன்மக ளாகிய
நல்லூர் கமநல சேவை பயிர்ச்
செய்கை உத்தியோ கத்தர் கதிர்காம
நாதனை வரித்த கௌரி தேவி
லண்டன்மா நகரில் கணக்காள ராக
விளங்கும் தாரணி புகழ்சிவ குமாரன்
அறிவன அறிந்த நன்மக்க ளாகப்
பாரும் மகிழப் பெற்றே மகிழ்ந்தனன்
அமரரின் மருகன் நாக லிங்கம்
பிள்ளை அமரருக் குறுதுணை யாக
விருந்தே குடும்ப வளர்ச்சிக்கு ஆலோசனை
வழங்கியும் உதவிகள் புரிந்தும் அமரரின்
பேரன்புக களாகிய இரும்புக ழாளன்
அம்பல வாணர் தன்மக னாகிய
அருணா சலம் தன்னை மணந்தே
மீனாட்சிப் பிள்ளை பகர் சரஸ்வதி
தேவி யுடனே நாக லிங்கம்
பிள்ளை அமரர் முத்துக் குமாரு
தன்னொடு கோவிந் தம்மா சேர்
கிருஷ்ண பிள்ளை கனக சபை
விஜய சுந்தர வல்லி யுடனே
இராச லட்சுமி அம்பல வாணர்
செய்யவன் நிகரும் சோதி யார்
எனுமிவர் தம்மை பெற்ற பேறுடை
நங்கையர் திலகம் நாக முத்து
உடன்பிறப் பாக உற்றிரு முத்தமனை
இலட்சுமிப் பிள்ளை மாது தன்னை
மைத்துனி யாக மாநிலத் துற்றோன்
இன்ன இனியன் நற்குண வாளன்
தன்னுயிர் பிரிதலை முன்னோடி யாக
உணர்ந்தே தன்னரும் குடும்பத் தினரை
அருகில் அழைத்தே தன்னிலைமை கூறி
அவர்தமக் காறுதல் வார்த்தை சொல்லியே
மன்னு விபவம் புரட்டாதி நன்மதி
சனி யென்னச் சாற்றுநல் வாரப்
பூர்வ பக்கம் பொருந்திய சப்தமி
எனுமிசை யமைந்த இனியநற் றினத்தே
மக்கள் தம்மொடு மனையாள் கதற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரர் மைத்துனர் பெரிதமர் சுற்றம்
ஊரா ரயலார் உற்றிடு நண்பர்
அனவிலாத் துயர்கொண் டழுதே யரற்றச்
செக்கரஞ் சடையோன் செய்ய திருவடி
பற்றும் விருப்பொடு பாரினில் மறைந்து
பேரா னந்தம் பெற்றனன் காணே.

## பொதுநிலை அஞ்சலி

### கட்டளைக் கலித்துறை

அன்னையொப்பா யன்பினற் புத்தி கூறலி ஞய்ந்தமந்திரி
தன்னையொப்பாய் நன்னெறி காட்டுதலிற் சமயகுரு
நின்னையொப்பா ரெவர்நீ யெம்முயர்த் துணையா நினைந்தோம்
பின்னுதிடித்தது போற்பிரிந் தாம்நம் விதிவசமே.

## மனையாள் கண்ணீர்

பொன்னுரு மங்கல நாணன் கழுத்திற் புனைந்தவந்நாள்
பொன்னே யுனைப்பிரி யேனினி யென்னப் புகன்றமொழி
மன்னு மறந்தனையோ வின்று யான்செய்த வஞ்சமென்னே
என்னே சிரமன் விதித்தன னேபிரிவென் செய்வனே.

## பிள்ளைகள் புலம்பல்

பெற்றே வளர்த்தெமைப் பேரறி வூட்டிப்பிப் பேருலகில்
மற்றூர் நிகரெமக் கென்றே மதித்திட வாழ்வளித்தீர்
வற்றாத செல்வமும் வாழ்வும் படைத்தவெம் தந்தையரே
மற்றா ரெவருளர் எந்தையென் றேயிங் குரைப்பதற்கே.

## மருமக்கள் மனக்கவலை

மெய்யன்பு வாய்ந்திடு மாதுலவெம்மை விருப்பமுடன்
நெய்யா ரடிசில் முதற்றந்து நற்புறம் நீவியுண்மை
பொய்யாம் நெறியிது வென்றுல மார்ந்திடப் போதிப்பையே
ஐயா! விதியெமக் கிவ்வண்ண மாகிய தாற்றரிதே.

## பெருமக்கள் புலம்பல்

### வெண்பா

எங்கள் பெருந்தந்தை என்றுதினம் போற்றும்யாம்
உங்களுடல் காணு துயிரழித்தோம் — தங்குலகில்
காற்றாய் மறைந்துநீர் சாருடலம் விட்டகலச்
சாற்றுகுறை யாவுளவோ தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரர் பிரிவாற்ருமை

என்பேரர் என்றெம்மை எப்போதும் சாற்றியே
அன்பாய் எமையணைக்கும் ஏந்தலே — இந்நிலத்தில்
மிக்கனவும் துய்ப்பனவும் வேண்டுவன தந்தளிக்கத்
தக்கவர்நின்போ லுண்டோ சாற்று.


## சுற்றத்தார் சோகம்

அற்றேம் உதவியளியென்றே யடைந்தோர்க்கு
மற்றுதவி தான்புரியும் மாமகியா — பற்றுமிகும்
சுற்றம் வருந்தித் துயருறவே விட்டகலற்
குற்றகுறை யாதோ வுமக்கு.

## தேற்றம்

மனனர் கணபதிப் பிள்ளையுமே தான்மறைந்தார்
என்னேகா ணேங்கி மிரங்குகின்றீர் — மன்னும்
"புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றூர் யார்."

## ஆன்மா சாந்தியடைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள் குடும்பத் தலைவரின்
ஈமச்சடங்கு. அந்தியேட்டி ஆகியவற்றிற்கு
நேரில் வருகை தந்தவர்களுக்கும்,
அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும்,
உதவிகள் புரிந்தவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

வணக்கம்

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

மூளாய். 17-10-88

லக்ஷ்மி அச்சகம், 222(76) ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org